1972 டிசம்பர் 9]

நங்கவள்ளி அரிசன குடியிருப்புக்குத் தொடர்புப் பாதை.

*109 வினா : திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மேட்டூர் தாலுகா நங்கவள்ளி அரிசன சேரிக்கு தொடர்புப் பாதை போடுவதற்கான அரசாணை எண் 612, ச.ந. 12—3—1971 தேதியிலேயே பிறப்பிக்கப்பட்டும், அவ்வாணை செயலுக்குக் கொண்டுவரப்படாமலிருப்ப தற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதன் சம்பந்தமான நில விலைத் தீர்வு விசாரணையை (அவார்டு விசாரணை) தனித் தாசில்தார், ஓமலூர் 6—10—1972 அன்று நடத்தியுள்ளார். (இந்நிலங்களில் பருத்தி பயிர் செய்யப்பட்டிருப்பதால்), நிலம் இன்னும் கையகப்படுத்தப் படவில்லை.

Industrial Unit at Hosur.

*110 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. Minister for Industries be pleased to state :—

(*a*) whether there is any proposal to start a feeding unit to Bangalore Hindustan Machine Tools Factory at Hosur where the symmetrical conditions and facilities are available ; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இதுபற்றி மத்திய அரசிடம் வலிறுத்திக் கூறப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, Hosur has a beautiful climate similar to that of Bangalore and the labour is also cheap there ; further our Government have declared that area as industrially backward. In view of this, may I know from the Hon. Minister for Industries whether this Government will press to open the Accessories Feeding Unit at Hosur to the Hindustan Machine Tool factory.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பற்றிய சில கருத்துக்களை மத்திய அமைச்சர் தெரிவித்தவுடன் நம்முடைய அரசு சார்பில் மத்திய அரசுக்கு வலியுறுத்தி இருக்கிறோம். ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ், பாரத் எர்த் மூவர்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ், இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நான்கின் சார்பில் உப தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காகப் பரிசீலனை செய்வதற்காக குழு அமைத்தால் மாநில அரசு ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறதென்று மத்திய தொழில் அமைச்சருக்கு எழுதப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when that Committee will examine this matter in that area.